**விரல் நுனியில் சந்தை நிலவரங்கள்**



நான் ஆரீப் 48 வயது, விவசாய குடும்பத்தில் பிறந்தவன். எனது குடும்பத்தில் அனைவருமே விவசாயம் தான் பிரதான தொழில். அவ்வப்போது வெளிநாடு சென்று வருவேன்.

எனக்கு 10 ஏக்கர் நிலத்தில் தென்னை சாகுபடியும், மா சாகுபடியும் செய்துள்ளேன். எங்கள் பகுதியில் தென்னை விவசாயம் பிரதான பயிர். நான் மட்டுமல்லாது எனது நண்பர்கள் உற்றார் உறவினர்கள் அனைவரும் இந்த தென்னை பயிரை பயிரிட்டு பலன் பெற்று வருகின்றனர். நாங்கள் அனைவருமே தேங்காய் வியாபாரிகள் சொன்ன விலைக்குத்தான் இதுவரை விற்பனை செய்து வந்தோம்.

இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் சந்தை பகுப்பாய்வாளர் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து என்னுடைய அலைபேசி எண்ணை பதிவு செய்தேன். என்னுடையது நோக்கியா செல்போன். தினமும் மதியம் 2.30 மணிக்கு விலை நிலவரங்களை தெரிந்து கொள்வேன்.

கடந்த சில மாதங்களாக தினசரி தேங்காய் விலை திருச்சி சந்தை நிலவரம் மற்றும் கும்பகோணம் சந்தை நிலவரம் தினம் தெரிந்து கொண்டு வியாபாரிகளுடன் சண்டையிட்டு கூடுதலாக விலை பெற முடிகிறது. எங்கள் நண்பர்களிடம் என்னிடமும் வியாபாரிகள் காய் வாங்க வரும் பொழுது கண்டிப்பாக மற்றவர்களுக்கு கொடுப்பதை விட 50 பைசா வரை கூடுதலாக ஒரு காய்க்கு விலை கிடைக்கிறது. கண்டிப்பாக இந்த சேவையை பயன்படுத்திய பிறகு தான் இந்த கூடுதல் லாபம் தெரிகிறது.

தென்னை விவசாயிகள் தங்கள் விலைவித்த காய்களை மதிப்புக் கூட்டுதல் செய்து விற்பனை செய்வதற்கு வேண்டிய உதவிகள் அதற்கான பயிற்சிகள், இதனை இலவசமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செய்து கொடுத்தால் எங்கள் வாழ்க்கைத் தரம் மேலும் உயரும் என எதிர்பார்க்கிறேன். பயனுள்ள தகவல்களை எங்களுக்கு அலைபேசி மூலம் நேரிடையாக கிடைத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

விவசாயிகளுக்கான தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி கண்டிப்பாக என் போன்ற விவசாயிகள் வாழ்க்கைத் தரம் கண்டிப்பாக உயரும் என என்னுகிறேன்.

திரு.டி.ஆர். மொஹமத் அரீப்,

தட்டும்மல் கிராமம்,

வடசருக்கை,பாபநாசம் தாலுக்கா

அலைபேசி: 09486532166,09487252129